வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

206—

தொழிலாளர் நீதிமன்றம்

*****10887**—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர், வாணியம்பாடி, பேரணாம்பட்டு மற்றும் திருப்பத்தூர் பகுதிகளிலே நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஏறத்தாழ 60,000–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் தங்களுடைய வழக்குகள் சம்பந்தமாக நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், 50 கி.மீ. தூரத்தில் உள்ள வேலூருக்குத்தான் செல்ல வேண்டும்.

2013 ஏப்ரல் 10]

இதனால் அவர்களுக்குக் காலதாமதம் மட்டுமல்ல, பணச் செலவும் அதிகமாக ஆகின்றது. ஆம்பூரிலே இருக்கக்கூடிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திலேயே தேவையான அளவிற்கு இடமும் இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நல்ல ஆட்சியிலேயே மாண்புமிகு முதலமைச்சருடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று, தொழிலாளர்களின் நலன் கருதி, ஆம்பூரில் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க பரிசீலனை செய்ய வேண்டுமாய் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நீதிமன்றங்கள் மாவட்ட அளவில் மட்டுமே அமைக்கப்படுகின்றன. அதுவும், தொழிலாளர்களுடைய வழக்குகளுக்கேற்ப, சில மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில், சென்னையில் நான்கும், வேலூரில் இரண்டும், சேலம், கோவை, கடலூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் என மொத்தம் 12 தொழிலாளர் நீதிமன்றங்களும், சென்னையில் ஒரு தொழில் தீர்ப்பாயமும் செயல்படுகின்றன. வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களை ஆட்சி எல்லையாகக் கொண்டு வேலூரில் 2 தொழிலாளர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. ஆக, அந்த அடிப்படையில் வேலூர் முதன்மை தொழிலாளர் நீதிமன்றத்தில் 282 தொழில் தாவாக்களும், வேலூர் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றத்தில் 71 தொழில் தாவாக்களும், ஆக மொத்தம் 353 தொழில் தாவாக்கள் நிலுவையில் உள்ளன. இவற்றில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் ஆகிய பகுதிகளிலுள்ள நிறுவனங்களுக்கு எதிராக 39 தொழில் தாவாக்கள் மட்டுமே தற்போது நிலுவையில் உள்ளன. ஆகவே, வேலூர் மற்றும் ஆம்பூருக்கு இடைப்பட்ட தூரம் 50 கி.மீ. மட்டும் உள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். இருந்தாலும், ஆம்பூர் பகுதியிலுள்ள நிறுவனங்களுக்கு எதிராக 39 தொழில் தாவாக்கள் மட்டுமே இருக்கின்ற காரணத்தினால், ஆம்பூரில் தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பதன் அவசியம் தற்போது*

எழவில்லை. அதுமட்டுமல்லாமல், மேலும் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமை ஆம்பூருக்குச் சென்று முகாமிட்டு, அங்கே இருக்கின்ற வழக்குகளை நடத்தி வருவதால், ஆம்பூர் வட்டாரத்தில் தனியாக தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூருக்குச் சென்று வர வேண்டும் என்ற சிரமத்திற்குப் பயந்தே, நிறைய பேர் எந்த முயற்சியையும் மேற்கொள்வதில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எதிர்காலத்தில் தேவையைக் கருதி, ஆம்பூர் வட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, வருகின்ற காலத்தில், வழக்குகள் அதிகமாக இருக்கின்றபட்சத்தில், தர்ம தேவதையின் ஆட்சியில், இது கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.